# தமிழ்மறைக்காவலர்
# கா. பொ. இரத்தினம்

பேராசிரியர் முனைவர் :
நா. சுப்பிரமணியன்

# தமிழ்மறைக்காவலர்
# கா. பொ. இரத்தினம்

[ வரலாறும் தமிழ்மறைப் பணிகளும் ]

ஆசிரியர் :

**முனைவர் நா. சுப்பிரமணியன்**

பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளியீடு :

**'வள்ளுவர் வழி' பதிப்பகம்**

3, தேசி குடியிருப்பு, பிரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை - 600 012.
தொ. பே. 642 5267

'வள்ளுவர் வழி' வெளியீடு-2

## நூலின் விபரம்

நூலின் பெயர் : தமிழ்மறைக்காவலர் கா. பொ. இரத்தினம்

நூலின் ஆசிரியர் : பேராசிரியர் முனைவர் நா. சுப்பிரமணியன்

பதிப்பு : முதற்பதிப்பு : நவம்பர் 1997

உரிமை : ஆசிரியருக்கு

பக்கம் : IV + 32 = 36

விலை : ரூ. 7/-

அச்சிட்டோர் : ஸ்ரீ கணேஷ் பிரஸ், 44, வடிவேல் தெரு, பிரம்பூர், சென்னை-600 011.

விற்பனை நிலையங்கள்

1. 'வள்ளுவர் வழி' பதிப்பகம், 3, தேசி குடியிருப்பு, பிரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை-600 012.
தொ. பே. 642 5267

2. காந்தளகம், ரகிசாகட்டடம், 834, அண்ணாசாலை, சென்னை-600 002. தொ. பே. 853 4505

3. உலகத் தமிழ்மறைக்கழகம், எச். 12/9, பாரி தெரு, கலாச்சேத்திரக் குடியிருப்பு, பேசன் நகர், சென்னை-600 090. தொ. பே. 491 0824

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை : கல்லை. தே. கண்ணன் | ... | IV |
| 2. | தமிழ்மறைக்காவலர் கா. பொ. இரத்தினம் (வரலாறு) | ... | 1 |
| 3. | திருக்குறள் பணிகளும் விருதுகளும் | ... | 10 |
| 4. | பேரறிஞர்களின் பாராட்டுரைகள் | ... | 15 |
| 5. | தமிழ்மறைக்காவலர் எழுதிய திருக்குறள் ஆய்வு நூல்கள் | ... | 22 |
| 6. | தமிழ்மறையைப் போற்றும் பாடல்கள் | ... | 24 |
| 7. | பிற நூல்கள் | ... | 32 |

# முன்னுரை

தமிழறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தமிழ் உலகு அறிந்த - போற்றும் பேரறிஞர் ஆவார். அவர் இலங்கை-யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்திருந்தாலும் தமிழ்மொழி பேசப்படும் மக்கள் வாழும் எல்லா நாட்டுப் பகுதியினருக்கும் உரியவராவார். அவரது தமிழ்ப்பற்றால், திருக்குறள் தொண்டால், கணியன் பூங்குன்றனார் கூறிய 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' என்ற சொற்றொடருக்கு உரியராவார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் பெரும்புலமை பெற்றவர். இருமொழியிலும் திறம்மிக்க உரை யாற்றும் சொற்பொழிவாளருமாவார். அரசியலிலும், சமுதாயப்பணியிலும், திருக்குறள் நெறியை உலகு எங்கும் பரப்புவதிலும் இடையறாத தொண்டாற்றியவர். சொற்பொழிவாளர் மட்டுமன்றி நூல் பல படைத்த எழுத்தாளரும், கவிதைகள் பல புனைந்த கவிஞருமாவார். எல்லாவற்றிற்கும் மேலாக மனிதநேயம் மிக்க பண்பாளர்.

*"கடன்என்ப நல்லவை*
*எல்லாம் கடன்அறிந்து*
*சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு (981)*

என்ற குறட்பாவுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சான்றாளர்.

இத்தகையரின் எண்பத்து மூன்றாவது அகவையின் போது அவரைப்பற்றிய இந்த வரலாற்று நூலை - வெளியிடுவதை 'வள்ளுவர் வழி' பதிப்பகம் தனக்குக் கிடைத்த ஒரு பெரும்பேறாக நினைத்துப் பெருமையடைகிறது.

**கல்லை. தே. கண்ணன்**

சென்னை-12. 'வள்ளுவர் வழி' பதிப்பக உரிமையாளர்.



தமிழ்மறைக்காவலர்
கா. பொ. இரத்தினம்

# தமிழ்மறைக் காவலர்
# கா. பொ. இரத்தினம்

திருக்குறளைத் தமிழ்மறையாக மட்டுமன்றி அனைத்துலகுக்குமான பொதுமறையாகவும் எடுத்துக் காட்டும் வகையில் வரலாறு படைத்துவரும் பேரறிஞர் வரிசையில் தனிக்கணிப்புக்குரிய ஒருவராகத் திகழ்பவர் ஈழத்துத் தமிழறிஞர் தமிழ்மறைக்காவலர்-முனைவர் **கா.பொ. இரத்தினம்** அவர்கள். ஏறத்தாழ அறுபது ஆண்டுகளாக திருக்குறளே 'பேச்சும் மூச்சுமாக'த் திகழ்ந்துவரும் அப்பெருமகனார் 'தமிழ்மறைக்கழகம்' என்ற நிறுவகம் அமைத்து ஆற்றி வந்துள்ள அரும்பணி திருக்குறளின் வரலாற்றில் மட்டுமன்றித் தமிழின வரலாற்றிலும் தனிக்கணிப்புக்குரிய சாதனையாகக் கொள்ளத்தக்கது. இச்சாதனைக்காகத் தமிழறிஞருலகம் இவரை வாழ்த்தி மதிப்பளித்து மகிழ்ந்துள்ளது; அனைத்துலக அறிஞருலகம் உரிய கணிப்பைத் தந்து கௌரவித்துள்ளது. இவ்வாறான பெருமை பெற்ற இப்பேரறிஞரைத் திருக்குறள் சான்றோர் என்ற வகையில் வரலாறு படைப்போருள் ஒருவராக இங்கு அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சி எய்துகிறேன்.

### ஈழத்துத் தமிழ்மரபில்
### திருக்குறள் பெற்றிருந்த கணிப்பு

பேரறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்களது குறளியல் ஈடுபாட்டை நோக்குவதற்கு முதற்கண் ஈழத்துத் தமிழ் மரபில் அந்நூல் பெற்றிருந்த கணிப்பைச் சுருக்கமாகச் சுட்டுவது அவசியமாகிறது.

தமிழகத்துக்கு வெளியே தமிழ்மக்கள் பெருந்தொகையினராகப் பலநூறு ஆண்டுகளாக வாழ்ந்து வரும் நாடு ஈழம். சங்கப்புலவரான ஈழத்துப் பூதன் தேவனார் காலம் முதல் அதற்கு ஒரு நீண்ட இலக்கியப் பாரம்பரியம் உளது. தமிழகத்தில் காலந்தோறும் எழுந்த இலக்கிய இலக்கணங்

களைச் சமகாலங்களிலேயே அறியவும் கற்றுத் தெளியவும் வாய்ப்பான - நெருக்கமான பண்பாட்டுத் தொடர்பு ஈழத்தில் நிலவி வந்துளது. அவ்வகையில் திருக்குறளும்; அது தமிழகத்தில் எழுந்த காலம் முதல் ஈழத்தில் அறியப்பட்டுப் பயிலப்பட்டு வந்திருக்கும் என்பது உய்த்துணரத்தக்கது. இவ்வாறு பயிலப்பட்டுவந்த மரபிலே, கடந்த நூற்றாண்டிலே சைவக்காவலராகத் திகழ்ந்த தவத்திரு ஆறுமுக நாவலர் அவர்களின் கல்விசார் செயற்பாடுகளில் அந்நூலும் தனிக் கவனிப்பைப் பெறலாயிற்று.

நாவலரவர்கள்,

> திருக்குறளைத் தமிழ்வேதம் எனவும்
> திருவள்ளுவரைத் தமிழ் வழங்கும்
> நிலமெங்கும் நல்லறிவுச் சுடர் கொழுத்திய
> தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்

எனவும் குறிப்பிட்டுள்ளார்[1]. திருக்குறளை அதன் பரிமேலழகருரையுடன் பிழையறப் பதிப்பித்த முதல்வர் என்ற சிறப்பு நாவலருக்கு உரியது. தமிழகத்தில் தமிழ்ப் பேரறிஞராகத் திகழ்ந்த மறைமலையடிகள் தம் இளமைக்காலத்தே திருக்குறளைப் பயில்வதற்கு நாவலர் பதிப்பித்த உரையே பெருந்துணையாக அமைந்த தென்பதை நினைவு கூர்ந்துள்ளார்[2]. என்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. ஈழத்தின் மற்றொரு தமிழ்ப் பேரறிஞரான சபாபதி நாவலர் அவர்கள்

> "திருக்குறள் பொருளின்பம் அகப்படக்கொண்டு அறங்கூறி வீட்டியல்பு நன்று நிலை நாட்டிய தத்துவ ஞான நூலாம் உத்தரவேதமென்பது தெற்றென உணர்க"

---

1. கா. பொ. இரத்தினம், திருவள்ளுவர் திருநாள் மலர் -தமிழ்மறைக் கழகம், கொழும்பு, 1955 பக் : 53
2. நாவலர் நினைவு மலர், 1937 பக். 47

எனத் தமது திராவிடப் பிரகாசிகை நூலிலே குறிப்பிட்டுள்ளமையும், இங்கு நமது கவனத்துக்குரியதாகிறது. இவ்வாறு திருக்குறளைப் போற்றி நின்ற ஈழத்துத் தமிழறிஞர் மரபிலே நமது தலைமுறையில் வாழும் முது பெரும் அறிஞராகத் திகழ்பவர் **கா. பொ. இரத்தினம்** அவர்கள்.

**வாழ்வும் வரலாறும் :**

பேரறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்கள் ஈழத்தில் வடபுலமாகிய யாழ்ப்பாண மாவட்டத்திலே வேலணை என்னும் ஊரில் பிறந்தவர்; நாவலர் ஞான பரம்பரையில் வந்த பேரறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுடன் இலக்கியத் தொடர்பு கொண்டவர்; தமது பண்டிதத் தேர்வுக்கு அவரது வழி காட்டலைப் பெற்றவர்; இலண்டன் பல்கலைக் கழகத்தின் பி. ஏ. (ஆனர்சு), சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., பி.ஓ.எல். ஆகிய பட்டங்களையும் பெற்றவர். உலகப் பல்கலைக்கழகம் (வ. அ) இவருக்கு டாக்டர் என்ற உயர் விருதை வழங்கிக் கௌரவித்துளது.

கொழும்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராகவும். இலங்கை அரசில் மொழித் திணைக்களத்தின் தமிழாராய்ச்சித் துறைத் தலைவராகவும், மலாயாப் பல்கலைக்கழகத்தின் இந்தியத்துறை விரிவுரையாளராகவும், பின்னர் தமிழரின் உரிமை காக்கும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி வந்துள்ள இப்பெரியாரின் உயிரோட்டமாகத் திகழ்ந்துள்ள சிந்தனை, தமிழ்மறையாகிய திருக்குறளை உலகப் பொதுமறை என்ற தனிக்கணிப்புக்கு இட்டு வர வேண்டுமென்ற பேரவாவேயாகும். ஈழத்தின் இனக்கொலைச்சூழலில், உடைமைகளை இழந்து தமிழகத்தில் புகலிட வாழ்க்கை மேற்கொண்டுள்ள இன்றைய சூழ்நிலையிலும் அவர் நெஞ்சில் தணியாத தாகமாகத் திகழ்வதும் இப்பேரவாவேயாம். தமிழ்மறைக்கழகம் அமைத்

டிமை அதன் சார்பில் 25 மாநாடுகளை உலகம் புகழும் வகையில் நிகழ்த்தி வந்துள்ளமை, திருக்குறள் தொடர்பாக பல நூல்கள், கட்டுரைகள் எழுதியுள்ளமை ஆகிய அனைத்துப் பணிகளிலும் ஆதார சுருதியாக நின்று வழிப் படுத்தி நின்றதும் இதுவே என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

## தமிழ்மறைக்கழகம் : அமைப்பும் செயற்பாடுகளும்

பேரறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்களது குறளியல் ஈடுபாடு அவரது மாணவப் பருவத்திலேயே - 1930 களிலேயே தொடங்கிவிட்டது. பல அரங்குகளில் அந்நூல் பற்றி உரை நிகழ்த்தி வந்துள்ள அவர், அம்முயற்சிகளின் தொடர்ச்சியாக 1952-ஆம் ஆண்டிலே (23-11-1952) கொழும்பு மாநகரில் தமிழ்மறைக் கழகத்தை நிறுவினார். இக்கழகத்தை அவர் தோற்றுவித்ததற்குக் காரணமா யமைந்த சூழலையும் நோக்கத்தையும் அவரது பின்வரும் கூற்றினூடாகவே தெளிந்து கொள்ளலாம்,

> "சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் இந்து அற நிலையச் சட்டம் இயற்றுதல் பற்றி எழுந்த பிணக்குகளிலே கருத்தூன்றிய மக்களுக்கு இந்த உண்மைகள் உள்ளத்தை உறுத்தியே இருக்கும். தமிழ் அறிஞர்களிற் சிலர் தமிழனின் பண்பாட்டையும், சமதர்மத்தையும் சிதைத்துச் சாதிவேற்றுமை பாராட்டிப் பேசினார்கள்; எழுதினார்கள்; தீண்டாமையை நீக்கி, 'யாவரும் கேளிர்' என்ற நிலைமை உண்டாக்குவதற் கும் "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற உண்மையை நிலை நாட்டுதற்கும் அவர்கள் முயல வில்லை, முயன்றவர்களையும் தூற்றினார்கள்......... இந்தச் செயல்களைக் கண்டு என் உள்ளம் துடித்தது. இந்த இலங்கையிலிருந்து தீண்டாமை அகற்றிச் சாதி வேற்றுமையைத் தகர்த்து, "எல்லோரும் ஒரு குலம்,

எல்லோரும் ஒரு நிறை; எல்லோரும் ஒரு விலை'' என்ற நிலைமையை உண்டாக்க இயன்றதைச் ''செய் செய்'' என்று என்மனம் ஏவியது. சிந்தித்தேன்! சிந்தித்தேன்! ...

''பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்''.

''பெருமைக்கும் ஏனைச்
சிறுமைக்குத் தத்தம்
கருமமே கட்டளைக் கல்''

எனுந் திருக்குறள்களே எனக்கு வழிகாட்டின. நம் அருமைத் தமிழ்மறையின் கருத்துக்களைத் தமிழ் மக்களின் உள்ளத்தில் வேரூன்றச் செய்தால் தமிழினம் தலையெடுக்கும் உயர்வடையும் என்று நான் முடிவு செய்தேன். தமிழ் மறைக்கழகத்தினை உருவாக்கினேன்.''[3]

இக்கூற்றுக்களில் தமிழ்மறைக்கழகம் உருவாதற்கு அடிப்படையாக அமைந்த சமூகப் பார்வை தெற்றெனப் புலப்படும். சமூக ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் பொதுவான இந்து மத பாரம்பரியத்தினின்று தனித்தன்மை வாய்ந்த - சமநிலை பேசும் - தமிழ்ப் பாரம்பரியத்தை வேறுபடுத்திக் காணவும் காட்டவும் துணை புரியத்தக்க முதன்மை நூலாக- தலைமை நூலாகத் திருக்குறளை அவர் கண்டார். காட்ட விழைந்தார். இத்த விழைவு தமிழ் மறைக்கழகமாக முளை விட்டது.

---

3. கா. பொ. இரத்தினம் - உரைவண்ணம், சென்னை 1938 பக் 27-28

இவ்வாறு உருவான கழகத்துக்கு அக்கால இலங்கை அமைச்சரவையில் அங்கம் வகித்த பேரறிஞர் இலக்கிய கலாநிதி சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமைக் காப்பாள ராக அமைந்தார். தமிழ் வழங்கும் நாடுகளின் 64 தமிழ்ப் பேரறிஞர்கள் காப்பாளர்களாக அமைந்து ஆதரவு நல்கினர். சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி., பேராசிரியர்கள் டாக்டர் மு. வரதராசனார், லெ.ப. கரு. இராமநாதன் செட்டி யார், அ. ச. ஞானசம்பந்தன், டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், ஆ. முத்துசிவன், திருக்குறளார் வி. முனுசாமி, வித்துவான் கி. வா. ஜகந்நாதன், கல்கி. ரா. கிருஷ்ண மூர்த்தி முதலியவர்கள் இவ்வகையிற் குறிப்பிடத்தக்க வர்கள். இக்கழகத்துக்குப் பேரறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்களே தலைமை வகித்தார். ஈழத்தின் தமிழறிஞர் களும் ஆர்வலர்களுமான நூற்றுக்கு மேற்பட்டோர் உறுப் பினர்களாக அமைந்து கழகத்தை வலுப்படுத்தினர்.

இக்கழகத்தின் நோக்கங்களாகப் பின்வருவன அமைந்தன:

1. திருவள்ளுவர் திருநாளைத் தமிழினைப் பேசும் மக்கள் வாழும் இடங்கள் எங்கும் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடச் செய்தல்.

2. திருவள்ளுவர் திருநாளைத் தமிழ் மக்கள் பெருந் தொகையினராக வாழும் நாடுகளில் அரசினர் விடுமுறை நாளாக்குவித்தல்.

3. திருக்குறள் மொழிபெயர்க்கப்படாதிருக்கும் மொழி களில் அதனை மொழிபெயர்க்கச் செய்தல்.

4. தமிழ் மொழி வாயிலாகவும் பிறமொழிகள் வாயி லாகவும் திருக்குறளின் அருமை பெருமைகளை யாவரும் அறியச் செய்தல்.

5. திருக்குறளையும் அதன் உரைகளையும் அச்சிட்டு அடக்க விலைக்கு விற்றல்.

6. திருக்குறளும் திருவள்ளுவரும் பற்றிய நூல்களைச் சேர்த்து ஊர்தோறும் வள்ளுவர் பண்ணைகளை அமைப்பித்தல்.

7. திருக்குறள் மாநாடுகளைப் பல்வேறிடங்களில் நடத்துதல்.

8. திருக்குறள் வகுப்புகள் நடத்துதல்.

9. திருக்குறளில் பற்றுண்டாக்குதற்குத் தேர்வுகள் நடத்துதல், பரிசில்கள் வழங்குதல் முதலியன[5].

திருவள்ளுவரின் உண்மையான வரலாறு அறியப்படாத நிலையிலே அவரது திருநாள் எது என்பது குறித்து தமிழக அறிஞருலகில் தெளிவற்ற நிலை நிலவியது. சிலர் மாசி மாத உத்தர நட்சத்திர நாளையும், வேறு சிலர் வைகாசி மாத அனுட நாளையும் திருவள்ளுவர் திருநாளாகக் கருதி விழாக்கள் எடுத்து வந்தனர். இவ்வாறு வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்படும் மரபை மாற்றிக் குறித்த ஒரு நாளையே அத்திருநாளாகக் கொள்ளும் வகையில் வைகாசி அனுடமே அந்நாள் என இக்கழகம் தீர்மானித்தது; அதனை அனைத்துலகிற்கும் அறிவித்தது. தமிழகத்திலும் ஈழத்திலும் தமிழர்வாழும் பிறநாடுகளிலும் வாழ்ந்த தமிழறிஞர்களுட்பலர் இக்கருத்தை வரவேற்றுப்பின் பற்றினர். பத்திரிகைகள், வானொலி போன்ற பொதுசனத் தொடர்பு சாதனங்களும் இக்கருத்துக்குப் பேராதரவு நல்கின. வைகாசி அனுடமே வள்ளுவர் நாள் என்ற கருத்து நிலைத்தது. அந்நாளில் 'வள்ளுவர் விழா, திருக்குறள் மாநாடுகள் என்பன நிகழ்த்துதல் பொது வழக்காயிற்று. தமிழ்மறைக்கழக ஆலோசனையின்படி சென்னை, திருச்சி,

5. திருவள்ளுவர் திருநாள்மலர் பக். 2

கொழும்பு, கோலாலம்பூர், சிங்கப்பூர் வானொலி நிலையங்கள் திருவள்ளுவர் திருநாள் சிறப்பு நிகழ்ச்சிகள் தயாரித்து ஒலிபரப்பின; தமிழ் இதழ்கள் பலவும் சிறப்பு மலர்கள் வெளியிட்டன.

திருக்குறள் மனனப்போட்டி, பேச்சுப்போட்டி முதலியவற்றைத் திட்டமிட்டு நிகழ்த்தியதன் மூலம், மாணவர் மத்தியிலும் வளர்ந்தோர் மத்தியிலும் திருக்குறளை மிக நெருக்கமாகக் கொண்டு சென்ற சாதனையைத் தமிழ்மறைக் கழகம் புரிந்தது. 380, 1080, 1330 என்ற மூன்று மட்டத்தில் குறள்களை மனனம் செய்யும் போட்டிகள் நிகழ்த்தப்பட்டன. இவற்றின் முதன்மைத் தகுதிகள் பெற்றோர் பொற்பதக்கப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர். ஏனைய மூன்று நிலைகளில் வந்தோர் வெள்ளிப் பதக்கப் பரிசில்கள் பெற்றனர். சித்தி பெற்ற பலர் சான்றிதழ்கள் பெற்றனர். அனைத்துலக மட்டத்திற் கட்டுரைப் போட்டிகளும் நிகழ்த்தப்பட்டன. பரிசில் பெற்ற கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுத் **தமிழ் மறைக் கட்டுரைகள்** என்ற தலைப்பில் நூலுருவம் எய்தின.

ஆண்டுதோறும் திருக்குறள் மாநாடுகளை நடத்துவதில் தமிழ்மறைக் கழகம் சிறப்பாகத் திட்டமிட்டுச் செயற்பட்டது. 1953 முதல் 1983 வரை மூப்பது ஆண்டுகளில் - தமிழ் ஈழப் போராட்டச் சூழலிலும்கூட - 24 மாநாடுகளை இக்கழகம் நடத்தியுள்ளது. ஈழத்தின் பல்வேறு ஊர்களிலும் நகரங்களிலும் இவை நிகழ்ந்துள்ளன. இம்மாநாடுகளில் தமிழகத்தினின்று பேரறிஞர்கள் பலர் வந்து கலந்துகொண்டு சிறப்புரைகள் நிகழ்த்தியுள்ளனர். இவ்வகையில் 50க்கு மேற்பட்ட தமிழக அறிஞர்கள் ஈழத்துக்கு வந்தனர். இதன் மூலம் பண்பாட்டுறவு நெருக்கம் அடைந்தது. திருக்குறளின் சிறப்பை அனைத்துலக மட்டத்தில் வியந்து போற்றி நின்ற சேர்மனிய அறிஞர் அல்பர்ட சுவைட்சர் முதலியவர்கள்கூட இவ்வாறான மாநாடுகளுக்கு அழைக்கப்

பட்டனர் என்பது இங்கு சிறப்பாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்வாறான மாநாடுகளில் சிறப்பு மலர்கள் வெளியிடச் செய்தமை, திருக்குறள் நூற் காட்சிகள் ஒழுங்கு செய்தமை என்பனவும் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளாகும்.

மேற்கண்டவாறு 1983 வரை ஈழத்தில் 24 மாநாடு களைச் சிறப்புற நிகழ்த்திய தமிழ்மறைக்கழகம் தனது 25-வது மாநாட்டை உலகத் திருக்குறள் மாநாடு ஆக 1992 ஆகஸ்ட் 7-10 தேதிகளில் தமிழக அறிஞர்களும் அனைத் துலக அறிஞர்களும் பங்குகொள்ளும் வண்ணம் நடத்தியது. மாநாட்டின் நிறைவுரையை மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் நிகழ்த்தினார். இலங்கையில் இனக்கொலைச் சூழலில் உடமைகள் யாவற்றையும் இழந்து தமிழகம் வந்து புகலிட வாழ்க்கை மேற்கொண்ட பேரறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தனிமனித நிறுவனமாக இயங்கி இந்த மாநாட்டைச் சிறப்புற நிகழ்த்தி யுள்ளமை யாவருடைய போற்றுதலுக்குமுரியதாகும் இந்த உலகத் திருக்குறள் மாநாட்டின் பின்னர் தமிழ் மறைக் கழகத்தின் பெயர் ''உலகத் தமிழ்மறைக் கழகம்'' என மாற்றப்பட்டது.

---

''ஒரு குலத்துக்கு ஒரு நீதி கூறி மக்களில் ஒரு சாராரை அடுக்கி ஒடுக்கி அடிமைகள் போல நடத்த முயல்வது முற் காலத்திலன்றி இக்காலத்துங் கூட உள்ளதொரு துரோகச் செயல் என்புதை நாம் நன்கு காண்கின்றோம். இத்தகைய கொடுமைகளும், துரோகங்களும், பழிகளும் இன்றி உலக மக்களை ஓரினமாக, ஒரு சுற்றமாக, உயர்வு தாழ்வில்லாத வர்களாக, ஒரு நிறையினராகக் கொண்டு எல்லோரும் இன்புற்று நன்கு வாழ வழி வகுத்த பழம்பெருமைக்கு உரிய வர்கள் நம் தமிழகச் சான்றோரேயாவர்''. கா. பொ. இரத்தினம்

தமிழ்ச் சான்றோர் பேரறிஞர் கா. பொ. இரத்தினம் திருக்குறளைப் படிக்கவும், பரப்பவும் மொழி பெயர்க்கவும் திருவள்ளுவர் நாளை யாவரும் கொண்டாடவும் இன்னோரன்ன பிறவற்றைச்செய்தற்கும் ஆற்றிய பணிகள்:

1. திருக்குறளே தமிழ் மறை - தமிழரின் மறை என்பதை நிலைநாட்டித் திருக்குறளை உலகெங்கும் பரப்புவதற்கு 1952 இல் **தமிழ் மறைக் கழகத்தை** நிறுவி, அதன் ஆயுள் தலைவராக இன்றுவரை அயராதும் அசையாமலும் தொடர்ந்து பணியாற்றுதல்.

2. தமிழ் வழங்கும் நாடுகளில் 64 தமிழ் பேரறிஞர்களைத் தெரிந்தெடுத்து அவர்களின் இசைவுடன் தமிழ் மறைக் கழகக் காப்பாளர்களாக நியமித்து அவர்களின் ஆதரவையும் உதவியையும் தம் தொண்டுகளுக்குப் பெற்றமை.

3. தமிழ் வழங்கும் நாடனைத்திலும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடச் செய்தமை.

4. திருவள்ளுவர் தொடர் ஆண்டை வழங்கச் செய்தமை.

5. சென்னை, திருச்சி, கொழும்பு, கோலாலம்பூர், சிங்கப்பூர் ஒலிபரப்பு நிலையங்கள் திருவள்ளுவர் திருநாளின்போது சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பச் செய்தமை.

6. தமிழ் ஏடுகள் பலவற்றைத், திருவள்ளுவர் திருநாள் சிறப்பிதழ்கள் வெளியிடச்செய்தமை.

7. சிறுவர்கள் தொடக்கம் எல்லாப் பருவத்தினரும் பங்கு கொள்ளத் தக்கதாகத் தொடக்கப்பிரிவு - கீழ்ப்பிரிவு - மத்தியபிரிவு - மேற்பிரிவு என நான்கு பிரிவுத் திருக்குறள் தேர்வுகளை ஆண்டுதோறும் நடத்திப்

பதக்கங்களும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கியமை.

8. திருக்குறள் பேச்சுப்போட்டிகள், மனனப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்கியமை.

9. அனைத்துலகத் திருக்குறள் கட்டுரைப் போட்டி நடத்திப் பரிசில் பெற்ற கட்டுரைகளையும் ஏனைய சிறந்த கட்டுரைகளையும் சேர்ந்துத் **தமிழ் மறைக் கட்டுரைகள்** எனும் நூலை வெளியிட்டமை.

10. 1953 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் ஈழப் போராட்டம் தொடங்கிய 1983 ஆம் ஆண்டு வரை ஆண்டு தோறும் இருபத்து நான்கு திருக்குறள் மாநாடுகளை இலங்கையிலே பல ஊர்களிலும் நகரங்களிலும் தொடர்ந்து நடத்தியமை.

11. மூன்று நாள்கள் தொடர்ந்து நடக்கும் இம்மாநாடுகள் ஒவ்வொன்றுக்கும் தமிழ்நாட்டுப் பேரறிஞர்களையும் அழைத்துத் தாய்நாட்டையும் சேய்நாட்டையும் இணைத்தமை. (ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கு பெற்றனர்)

12. மாநாடுகளில் மாநாட்டுச் சிறப்பு மலர்கள் வெளியிடச் செய்தமை.

13. மாநாடுகளிலே திருக்குறள் நூற்காட்சி ஒழுங்கு செய்தமை.

14 திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுவிழாவை எங்கும் சிறப்பாகக் கொண்டாடச் செய்தமை; திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டு மலர் வெளியிட்டமை.

15. திருக்குறள் பற்றிய நூல்களையும் மொழிபெயர்ப்புகளையும் சேர்க்கும் பணியில் ஈடுபட்டமை.

16. பல்துறைப் பேரறிஞர் அல்பேட்சுவைச்சருடன் தொடர்பு கொண்டமை, அவரைத் திருக்குறள் மாநாட்டுக்கழைத்தமை.

17. தமிழ் மறைக் கழகத்தின் பலமுனைத் தொண்டு களைக் குறிக்கும் திருவள்ளுவர் நாள் மலர் வெளியிட்டமை.

19. தமிழகத்திலும், தில்லி முதலிய நகரங்களிலும், பிற நாடுகளிலும் திருக்குறள் பற்றி உரைகள் நிகழ்த்தியமை.

20. இலங்கைப் பாராளுமன்றத்திலும், அனைத்துலக மாநாடுகளிலும் - திருக்குறள்களை எடுத்து விளக்கி உரை ஆற்றியமை.

21. பல மொழிகளிலே திருக்குறளை மொழிபெயர்ப்பிக்கப் பலவகைகளில் ஆக்கமும் ஊக்கமும் நல்கியமை.

22. கைவித்திய மொழியிலும், பர்மிய மொழியிலும், மொழி பெயர்ப்புகளைச் செய்வித்தமை. சேர்மன் மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்த பேராசிரியர் ஊவே பைசேர்த் அவர்களை உலகத் திருக்குறள் மாநாட் டுக்கு அழைத்துச் சிறப்புச் செய்தமை.

23. இந்திய சாகித்திய மன்றத்தை இத்துறையில் ஊக்கியமை.

24. தமிழ் மறைக் கழகத்தின் இருபத்தைந்தாவது திருக் குறள் மாநாட்டை உலகத் திருக்குறள் மாநாடாகச் சென்னையில் நான்குநாள்கள் சிறப்பாக நடத்தியமை.

25. திருக்குறளைப் பாடமாக்கிய இளைஞர்களுக்குப் பதக்கப் பரிசில்கள் வழங்கி ஊக்கியமை.

26. சென்னைத் தங்கக் கடற்கரையிலே தமிழ் மறைக் கோட்டம் (திருக்குறள் நூல் நிலையம்) நிறுவ வழிப்படுத்தி ஊக்கியமை.

27. மதுராந்தகம் குருகுலத்தில் 'தமிழ்மறைப் பேச்சு'ப் போட்டி அறக்கட்டளை நிறுவியமை.

28. மயிலைத் திருவள்ளுவர் திருக்கோயிலில் ஆண்டு தோறும் ''திருக்குறள் முற்றோதலுக்கு'' அறக் கட்டளை நிறுவியமை.

**திருக்குறள் பணிக்காக இவர் பெற்ற விருதுகளும், பாராட்டுக்களும்**

அ. திருக்குறள் செல்வர் - திருக்குறள் மாநாடு யாழ்ப்பாணம் 1960

ஆ. தமிழ் மறைக் காவலர் - டாக்டர் வ. சுப. மாணிக்கனார் 1980

இ. குறள் ஆய்வுச் செம்மல் - உலகத் திருக்குறள் உயராய்வு மையம் 1992

ஈ. குறள் நெறிச் செம்மல் - தமிழ்க் கா.சு நினைவு இலக்கியக் குழு, குளித்தலை 1992

உ. திருக்குறள் செம்மல் - மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர், இரா. நெடுஞ்செழியன், 1992

ஊ. திருக்குறள் காவலர் - குன்றக்குடி அடிகளார், 1992

எ. திருவள்ளுவர் சீர் பரவுவார் - 'வள்ளுவர் வழி' வாசகர் வட்டம் - 1993

## தமிழ் பணிக்காக இவர் பெற்ற விருதுகள்

1. செந்தமிழ்க் கலைமணி - மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் 1980
2. தமிழ்ச் சான்றோர் - தமிழகப் புலவர் குழு - 1983
3. உலகத் தமிழர் செம்மல் - உலகத் தமிழர் மாமன்றம் 1994
4. திரு.வி.க. விருது - தமிழக அரசு - 1995

''உலகத்துயிர்கள் யாவும் ஒருவகைக் காப்பினை நாடுகின்றன குழந்தையைத் தாய் காக்கின்றாள். குடும்பத்தைத் தலைவன் காக்கின்றான். நாட்டை அரசு காக்கின்றது. இவ்வாறு காப்பே வாழ்வுக்கு இன்றியமையாததாக விளங்குகிறது. எனவே வாழ்வின் எந்நிலையிலும் மக்களைக் காப்பாற்றும் அறிவை நல்கும் நூல்களைக் காப்பு நூல்கள்—மறை நூல்கள் என்று நம் முன்னோர் போற்றினார்கள் எனலாம்.

சமயத்துறை, வாழ்வுத்துறை, பொருளாதாரத் துறை, அரசியல் துறை முதலிய பல துறையிலே புரட்சியாளார் பலர் தோன்றி மக்கள் வாழ்வைச் செம்மைப்படுத்தியுளர். இப்புரட்சியாளர்களுக்குள்ளே முன்னணியில் விளங்குபவர் திருவள்ளுவராவர். மக்கள் வாழ்வின் துறையனைத்திலும் மாபெரும் புரட்சியினை அவர் உண்டாக்கியிருக்கிறார். அவருடைய தமிழ் மறை மாபெரும் புரட்சிக் களஞ்சியமாக மிளிர்கிறது. அவர் காலத்திலிருந்த கண்மூடிப் பழக்கங்கள் யாவற்றுக்கும் மாறாக அவர் புரட்சி செய்திருக்கிறார்''.

—கா. பொ. இரத்தினம்

# பேரறிஞர்களின் பாராட்டுரைகள்

## மாண்புமிகு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நிதி அமைச்சர்

''ஈழ நாட்டுப் பாராளுமன்றத்தின் முன்னாள் உறுப்பினரும், அந்நாட்டு அரசியல் அறிஞர்களில் தலை சிறந்த ஒருவரும், தமிழ்ச் சான்றோர்களில் புகழ்பெற்றுத் திகழ்பவரும், திருக்குறள் நெறி பரப்பும் செம்மலும் ஈழ நாட்டுத் தமிழ்மறைக் கழகத் தலைவரும் கற்றார் பலரும் போற்றும் கற்றறிவாளருமான பேராசிரியர் கா. பொ. இரத்தினம்''.

''உலகத் தமிழ் மறைக் கழகத்தைத் தோற்றுவித்து அதன் தலைவராக இருந்து பல்லாண்டுக் காலம் குவலயம் முழுவதும் குறள் நெறி பரப்பும் முனைப்புள்ளத்தோடு முறையாக நிறைவேற்றிவரும் முனைவர் கா. பொ. இரத்தினம் அவர்களின் பெருமுயற்சியால் மாநாடு உருப்பெற்று விளங்குவது போற்றிப் பாரா்ராட்டுவதற்குரியது'' (உலகக் திருக் குறள மாநாடு)

## அறிஞர் செம்மல் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள், முன்னைத் துணைவேந்தர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

''ஈழத் தமிழ்ப் பேராசிரியர், தமிழ்மறைக் காவலர் திரு. கா. பொ. இரத்தினம் தமிழ் நெறியும் அரசியலும் நன்கறிந்தவர். திருக்குறள் மேல் தனிநாட்டம் கொண்டு வாழ்நாள் முழுதும் அதனை உலகறியப் பரப்பியவர்; வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழும் குறளும் நுழையச் செய்தவர். என் நெடுநாள் நண்பர். காலத்தாலும் மாறாத சால்புக் கொள்கையர்''.

## தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள்

''பேராசிரியர் கா. பொ. இரத்தினம் ஒரு சிறந்த தமிழ் அறிஞர். பண்டைய தமிழறிஞராகிய கோவூர்க் கிழார்

போல அரசியலில் ஈடுபட்டுள்ள தமிழறிஞர். கற்பக மலரைப் படித்துபடித்து மகிழ்தேன். இன்பத் தமிழ் நடை நெஞ்சினைத் தொட்டது. சம உடைமைச் சமுதாயம் மலர வேண்டும் என்ற ஆசிரியர் கருத்து ஏற்கத்தக்கது மட்டு மன்றிப் பின்பற்றத் தக்கதுமாகும்.

நல்ல படைப்பு; வாழ்க்கைக்குப் பயன்படும் படைப்பு, இரத்தினம் அவர்களின் திருக்குறள் ஆர்வம் இந்நூலில் மணக்கிறது. ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நூல்.''

''திருக்குறள் காவலர் முனைவர் கா. பொ. இரத்தினம் அவர்கள் உலகத் திருக்குறள் மாநாடு நடத்துவது மகிழ்ச்சி யைத் தருகிறது''.

**டாக்டர் வா. செ. குழந்தைசாமி அவர்கள்**
துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம்,

''திரு. இரத்தினம் அவர்கள் சிறந்த தமிழ் அறிஞர்; இலங்கை அரசியலில் உயர்மட்ட நிலையில் நீண்டகால அனுபவம் உள்ளவர். தமிழ்மொழிப் பற்றும் தமிழ் இன உணர்வும் நிறைந்தவர். நிதானப்போக்கும் முதிர்ந்த பார்வையும் உள்ளவர். அரசியல்வாதி. அரை நூற்றாண்டு களுக்கு மேலான தரம் மிக்க அரசியல் வாழ்வுக்கும் தமிழ் மொழி தமிழினத் தொண்டுக்கும் இலக்கியப் படைப்புக்கும் சொந்தக்காரர்.

''சிறந்த தமிழ் அன்பர்; எனினும் எதிலும் தீவிரவாதி அல்லர்; மக்கள் விருப்பத்தை மதித்து அவர்கள் உரிமைக் காகப் போராடியவர்; ஆனால் வன்முறையாளர் அல்லர்; நிதானத்தோடும் நெறியோடும் வரம்புக்குள் நின்று வழி தவறாது நீதிக்காகப் போராடியவர். பல நூல்களுக்கு ஆசிரியர். குறிப்பாகத் திருக்குறளில் ஆழ்ந்த ஈடுபாடும் நுண்பொருள் காணும் புலமையும், சென்றவிடமெல்லாம் அதன் சிறப்புப் பற்றிப் பேசும் எழுதும் சிந்தனையும் கொண்டவர்''.

**டாக்டர் அவ்வை நடராசன், துணைவேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம்**

''அரசியல் தலைமையும், அருந்தமிழ்ப் புலமையும் ஒருங்குவாய்ந்த பேராசிரியர் கா. பொ. இரத்தினம் கற்றுத் துறைபோகிய செந்தமிழ் வித்தகர். கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர்; ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்; தமிழர் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் அடிகோலும் பெருந்தகையாளர்; உலகத் தமிழ் மன்றம் போன்ற உலகளாவிய அமைப்புகளைத் தொடங்கி நடத்திய மாட்சி வாய்ந்தவர்; தமிழர் நாடுகளில் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடி மகிழச் செய்தவர்''.

**டாக்டர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள், தலைவர், தமிழ் வளர்ச்சி உயர் மட்டக்குழு**

''பேராசிரியர் கா. பொ இரத்தினம் அவர்களை நாற்பதாண்டுக் காலமாக நன்கறிவேன் இலங்கையில் முதன் முதலில் எனக்கு அறிமுகமான நண்பர் இவரே. இப்பெரும் புலவர் ஆண்டுதோறும் திருவள்ளுவர் திருநாளை இலங்கை நாட்டில் கொண்டாடியதோடு இந்தியத் தமிழ்நாட்டிலும் கொண்டாட முயற்சி எடுத்தார். இவரால் தூண்டப்பட்டுத் தமிழகத்திலே தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஆண்டு தோறும் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடச் செய்தேன்.

இந்தியத் தமிழகத்திலுள்ள புலவர் பெருமக்களையெல்லாம் அடிக்கடி இலங்கைக்கு அழைத்து, இலங்கைத் தமிழர்களுக்கு அவர்களை அறிமுகப்படுத்தி வந்த பெருமை இவருக்குண்டு''.

**கலைமாமணி திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள், இயக்குநர், திருக்குறள் நெறிபரப்பு மையம், சென்னை.**

''இப்புத்தகத்துக்குக் ''கற்பகமலர்'' என்று பெயர் சூட்டியிருப்பது மிகவும் பொருத்தமேயாகும் என்பதை அறிந்து பேராசிரியர் இரத்தினம் அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். அவரது நுண்மாண் நுழைபுலம் கண்டு வியக்கிறேன். புதுமையாகச் சிந்திக்கும் அவரது போக்கு, குறளாசிரியர் கருத்துக்களுக்கு வலிவு சேர்ப்பதை எண்ணி நான் மகிழ்ச்சி இடைகிறேன். காலங்காலமாகத் தவறாக மக்கள் மன்த்தில் படிந்துவிட்ட மாசுகளைப் போக்கும் முயற்சியில் பேராசிரியர் இரத்தினம் அவர்கள் ஈடுபட்டு வெற்றி கண்டிருக்கிறார்.

தமிழ் மறைக் கழகத்தின் சார்பில் அவர் ஆற்றிய அரும் பணிகளைத் தமிழகம் நன்றாக அறியும். பல மாநாடுகளை நடத்திப் பார்புகழும் சிறப்பைப் பெற்றவர் ஆவர்.

தமிழகத்துக்கு வந்த பிறகும் தமிழுக்கு அவர் ஆற்றும் தொண்டு..............தொடர்கிறது. அவருடைய தமிழ்த் தொண்டு வென்று தமிழகத்தில் புதிய புகழை அவருக்குப் பெற்றுத் தரும் என்று உறுதியாக நம்புகிறேன்''.

**பேராசிரியர் டாக்டர், ந. சஞ்சீவி அவர்கள், தலைவர், இலக்கியத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்**

''வழிவழி ஈழத் தமிழகம் ஈன்றெடுத்து வரும் தமிழ் அறிஞர்களுள் பேராசிரியர் கா. பொ. இரத்தினம் அவர்கள் சிறப்பிடம் பெறுகிறார்கள். தலையாய காரணம் அவர்கள் சிறந்த தமிழ் அறிஞராக மட்டுமன்றித் தரம் நிறைந்த அரசியல் அறிஞராகவும் இலங்குவதேயாகும். இலங்கை

நாடாளுமன்றத்தில் உறுப்பினராய் விளங்கிய பேராசிரியர் கா. பொ. இரத்தினம் தமிழ் ஆளும் மன்றங்கள் எல்லாம் போற்றிப் பாராட்டும் தகுதியுடையவராய் இருத்தல் பெரு மகிழ்வுக்குரியது''.

**பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களும், டாக்டர் சாலினி இளந்திரையன் அவர்களும்.**

''பன்னூலாசிரியராகிய இந்த நல்லவரின் ஒரே ஒரு புத்தகத்துக்கு என்று சில சொற்கள் எழுதுவதைவிட அவருடைய பன்முகச் சாதனைகளில் ஒரு விளிம்பையாவது நினைவு கூர்வதையே நாங்கள் தக்கதென்று கருதுகிறோம். கா. பொ. இரத்தினம் அவர்களின் செயல் திறம் சக்தி வாய்ந்த ஓர் அரசியல்வாதி என்ற அளவோடு நின்றுவிட வில்லை, ஒரு சாதனைத்தளம் அமைத்துக்கொண்டு அதிலே செம்மாந்துநின்றவர் அவர். பலருக்கு வாய்க்காத தமிழியல் சாதனைத்தளம் அது.

தமிழகத்தில் தகுசெல்வாக்குப் பெற்றிருந்த அவருக்குத் தமிழ் ஈழமெங்கும் ஏற்பட்டிருந்த மதிப்பை அவர் அந்நாடு முழுவதும் எங்களுக்காக ஏற்பாடு செய்து நடத்திய இலக்கிய நிகழ்ச்சிகள் மூலம் உணர்ந்து உவகை கொண்டோம். 1964 இல் இந்தியத் தலைநகரில்..............உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (ஐ. ஏ. ரி. ஆர்) உருவாயிற்று. அதன் தந்தையும் தாயும் அறிஞர் கா. பொ. இரத்தினம் அவர்களும் தனிநாயக அடிகளாருமே ஆவர். உலகு தழுவிய தமிழ் அமைப்பு ஒன்று வேண்டும் என்ற எண்ணம் இப்பெருமகனாருக்குப் பல காலமாகவே இருந்துவந்தது. தமிழ் மறைக் கழகத்தை (1952இல்) உருவாக்கித் தமிழ் மக்களிடையே குறட் செய்தியைப் பரப்பிவந்த நாளிலேயே இந்த எண்ணம் அவர் நெஞ்சில் கருக்கொண்டு நிலைத்தது. மலேசியாவில் தமிழ்த்தொண்டு புரிந்து வந்த நாளிலேயே 'உலகத் தமிழ் மன்றம்' என்னும் அமைப்பை அவர் உருவாக்கிவிட்டார்''

**டாக்டர். ஆறு. அழகப்பன் அவர்கள், தமிழியல் துறைத் தலைவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்**

''தமிழ்மொழி - இனம் - சமுதாயம் என்ற நிலையில் சொல்லும் செயலும் ஒன்றாக உறுதியுடனும், நேர்மையுடனும் செயலாற்றும் ஈழத் தமிழர்களுள் பேராசிரியர் கா. பொ. இரத்தினம் குறிப்பிடத்தக்கவராவார். திருக்குறட் கருத்தினைப் பரப்பத் தமிழ் மறைக் கழகம் கண்ட தமிழ்த் தாயின் தவப்புதல்வர்; தமிழர் ஒற்றுமையோங்கக் குரல் கொடுக்கும் ஆர்வலர்; எதனையும் அஞ்சாது இடித்துரைக்கும் அரசியல் அறிஞர்; தீண்டாமையை அறவே களையத் துடிக்கும் சமூகத்தொண்டர்; சாதி சமய வேற்றுமைகளை நீக்க நினைக்கும் நல்லெண்ணத்தர்; கலை ஆர்வம் மிக்கவர்; பள்ளிமுதல் பல்கலைக் கழகம் வரை நல்லாசிரியராகப் பணியாற்றிய பேராசிரியர்''.

**சென்னைக் கம்பன் கழகத்தினர்**

தமிழ் மறைக் கழகத்தை 1952 இலேயே நிறுவி உலகமெங்கும் குறள் நெறிபரவச் செய்த **செயல்வீரர்.**

தமிழ் வழங்கும் நாடனைத்திலும் திருவள்ளுவர் திருநாளைக கொண்டாடச் செய்து திருவள்ளுவர் தொடர் ஆண்டை முதன் முதலில் வழங்கச் செய்து, செந்தமிழ்த் தொண்டைச் செயற்படுத்தி, செகமெங்கும் தமிழ்க்கொடி பறக்கச் செய்த **செயல்மறவர்.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலணையிற் பிறந்து 18 ஆண்டுகள் தொடர்ந்து இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினராய்த் தமிழ் உரிமைக்குக் குரல் கொடுத்து உறவுக்குக் கைகொடுத்த பண்டித கா. பொ. இரத்தினம் அவர்கள்தான் வள்ளுவன் தோன்றிய வண்டமிழ் நாட்டில் மைலாப்பூரில்

திருவள்ளுவர் திருக்கோயிலில் ஆண்டுதோறும் திருக்குறள் முற்றோதலுக்கு அறக்கட்டளை நிறுவிய தீரர்.

**பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன்**

"உலகளந்தான் அன்பில் உளமளந்தான் ஈழ
நிலமளந்தான் ஈன்ற நினைவால் - தலமளந்த
ஒப்பிலாக் கா. பொ. ஒளிசேர் இரத்தினந்தான்
முப்பால் குறள்போன்றோன் முன்",

"வள்ளுவம்போல் வையக வாழ்வு நெறி நூலுண்டோ?
தெள்ளிய ஆய்ந்த திறமுண்டோ? உள்ளத்தை
ஊக்கும் அறநூலும் உண்டோ? எனவினவித்
தேக்கும் கவிநூல் சித்து".

"வாழிய கா. பொ. வளமார் கவிஅரசர்
வாழிய அன்னார் வளராயுள் - வாழியவர்
ஏரார்ந்த தொண்டு இரத்தினப் பேரறிஞர்
சீரார்ந்து வாழ்க சிறந்து".

---

"கடவுளுடைய வாக்குகள் இவை. முனிவர்களுடைய கூற்றுக்கள் இவை. இவற்றை ஆராயாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆராய்தற்கு முற்பட்டால், பொருத்தமற்றன என்று இகழ்ந்தால் நரகததில் அழுந்துவீர்கள்" என்று முழங்கிய நூல்கள் மலிந்த அக்காலத்தில் "உண்மைப் பொருளை ஆராய்ந்து பார்த்து அறிதல் வேண்டும். குருட்டுத் தனமாக எதையும் நம்புதல் கூடாது, யார் கூற்றானாலும் ஆராயாமல் ஏற்றுக்கொள்ளப்படாது" என்று பெரும் புரட்சி செய்தவர் வள்ளுவர் பெருமான்". கா. பொ. இரத்தினம்

# தமிழ்மறைக் காவலர் எழுதிய திருக்குறள் ஆய்வு நூல்கள்

## 1. தமிழ்மறைக் கட்டுரைகள் 1958

போட்டிக் கட்டுரைகள் சீர் செய்து முன்னுரையுடன் பதிப்பிக்கப்பட்டன.

## 2. தமிழ் மறை விருந்து 1980

இருபதாவது திருக்குறள் மாநாட்டில் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் முன்னிலையில் அருட்திரு தனிநாயக அடிகளாரால் வெளியிடப்பட்டது.

தமிழ்மறை, புரட்சிக் களஞ்சியம், நாடும் நல்லாட்சியும், வெற்றிக்கு வழி, மலரினும் மெல்லிது, நிறைவிளக்கு, பெற்ற தாய், அளவைகளும் அடையாளங்களும், தற்கொலை, பொருளாதாரம், உன்னை நீ காதலிக்கின்றாயா? அறப்போரும் தமிழ்மறையும், திருக்குறளை விளக்கும் நூல்கள், திருவள்ளுவர் தொடர் ஆண்டு, தலைமை உரை எனும் கட்டுரைகளைக் கொண்டது.

## 3. கற்பக மலர் 1986

அவனி காணா அருமருந்து(பாட்டு) கற்பகமலர், வள்ளுவர் வாய்ச் சொல், இறக்கும்வரை, தலை அறம், கள்ளும் காமமும், விதியும் விடாமுயற்சியும், ஐந்து தூண்கள், காந்தியமும் வள்ளுவமும், அம்பும் வேலும், சம உடைமைக்கு வழி, கனியும்கருக்காயும், பாராளுமன்றத்தில், ஒரு குறளே போதும், திருக்குறளும் மொழி பெயர்ப்புகளும் எனும் கட்டுரைகளைக் கொண்டது.

## 4. வள்ளுவரைக் கேளுங்கள் 1992

திருக்குறளிலுள்ள பொருள்கள் பற்றி மக்கள் பலர் கேட்ட எழுநூற்றுக்கும் மேற்பட்ட கேள்விகளுக்கு விடைகள். கேள்வி - விடை, அரும்பதவுரை, விளக்கவுரை கொடுக்கப்பட்டுளது.

## 5. உலகத்துக்கு ஒன்று

இருபத்தாறாவது திருக்குறள் மாநாட்டில் நிதி அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்களால் வெளியிடப்பட்டது. உலகத்துக்கு ஒன்று, ஏர்ப் பின்னது உலகம், சிறைமீட்பு, சுடும்! சுடும்!! சுடும்!!! நோயற்ற வாழ்வு, அறஞ்சாரா வறுமை, மரங்கள், நோயும் தீயும், கெடும் கெடும், 'தீது உண்டோ, ஒரு குறளில் முப்பால்திருவள்ளுவரிடம் செல்க எனும் கட்டுரைகளையும் உலகத்து மக்களே வாரீர் எனும் பாடலையும் தமிழ்மறை விருந்திலுள்ள கட்டுரைகளையும் கொண்டது.

இந்நூல்களுடன் தமிழ்மறைக் கழக வெளியீடாகத் திருவள்ளுவர் திருநாள் மலரும் 1955இல் வெளியிடப்பட்டுளது தமிழ்மறைக் கழக வரலாறு, காப்பாளர்கள், உறுப்பினர்கள், திருவள்ளுவர் திருநாள் வரலாறு, பத்திரிகைகளின் கருத்துரைகள், அறிஞர்களின் ஆதரவு உரைகள், வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள், 1953, 1954-ஆம் ஆண்டுகளில் திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடிய நிறுவகங்கள், முதலாவது திருக்குறள் மாநாட்டில் 28 5-83 இல் தமிழ்மறைக் காவலர்கா. பொ. இரத்தினம் நிகழ்த்திய உரை, 'வள்ளுவன் சொல்லே வேதம்' முதலியன இந்நூலில் உள.

## தமிழ்மறையைப் போற்றும் தமிழ்மறைக்காவலரின் பாடல்கள்

# தமிழ்மறையின் தனிமாண்பு

இனியுலகில் எவருங்கண் டியம்பிடவே முடியாத
இனிமை மிக்க
தனிநெறியை உலகமக்கள் தலைநெறிதான் எனக்கொண்டு
தவிப்பே இன்றிக்
கனிவுறுநல் உள்ளத்திற் கரவின்றிப் பூசலின்றிக்
கவலை இன்றி
முனிவகற்றி வாழ்ந்திடவே முதற்புலவர் **தமிழ்மறையில்**
முன்பே சொன்னார்.

நல்லோர்கள் வகுத்துரைத்த நன்னெறிகள் பிறருடைய
நன்மை எண்ணாப்
புல்லோர்கள் தம்மாலே புவியோர்க்குப் பயனின்றிப்
போகச் சூதில்
வல்லோர்கள் முயன்றாலும் வடுப்படுத்த முடியாத
வழியைக் காட்டல்
எல்லோரும் வழுத்துகின்ற எழில்நிறைந்த **தமிழ்மறையின்**
**ஏற்றம் அன்றோ!**

அருளினுக்குப் பொருள்கூறி அன்பினுக்கு நல்லுருவம்
அமைத்துத் தந்து
பொருளினுக்கு வழிசொல்லிப் புகழறத்தின் திறமுரைத்துப்
பொல்லாத் தீமை
இருளினுக்கு விடிவுணர்த்தி இன்பத்துக் கணைகட்டி
இழிவு செய்யும்
மருளினுக்கு மருந்தியம்பி வாழ்வுநெறி **வகுத்ததமிழ்**
**மறையே வாழி.**

# படித்துப் பயன் பெறுவீர்

உலகம் எங்கும் உள்ள அறிஞர்
உயர்ந்த நூலென் றேத்திடும்
அலகில் புகழை அடைந்து மிளிரும்
அரிய நூலே திருக்குறள்

அறத்தை அன்பை அரசின் பண்பை
அருளை விளக்கிக் கூறிடும்
மறத்தை நீக்கி மனிதர் உய்ந்து
வாழும் வழியைக் காட்டிடும்.

வறுமை வாட்ட வருந்தி வாடி
வதங்கி வன்மை மங்கினோர்
சிறுமை போக்கிச் செல்வம் ஈட்டச்
செம்மை வழியைச் செப்பிடும்.

அன்பைப் பெருக்கி அருளைப் பேணி
அறத்தை ஓம்பித் தாழ்விலா
இன்பம் தேக்கி இனிது வாழ
ஏற்ற வழியைச் சாற்றிடும்.

குறளின் திறத்தைக் கூற முயன்றால்
கூறும் சொல்லுக் கொள்ளுமோ
திறனை ஓர்ந்து தெளிந்து கற்றுச்
சிறந்த பயனை ஈட்டுவீர்.

# திருவள்ளுவர் திருநாள்

வள்ளுவரின் திருநாள் இன்றே - அவரை
வாயார வாழ்த்திக்கொண் டாடுவோம் நன்றே

உள்ளத் திருளினை ஓட்டும் - வாழ்வு
உயர்ந்திட நல்வழி எல்லோர்க்கும் காட்டும்
தெள்ளமு தாம்வான் மறையை - எங்கள்
செந்தமிழ்த் தாயருளால் செப்பிய சான்றோன்

(வள்ளுவரின்)

எல்லாச் சமயங்களும் ஏத்த-உலகில்
எந்நாடும் மாண்பினை எண்ணியெண்ணி வாழ்த்தப்
பல்வகைத் தீமைகள் நீங்க-நிலைத்த
பைந்தமிழ் நூலருளிப் பார்புரக்கும் சீரோன்

(வள்ளுவரின்)

சாதி சமயச் சழக்கு - ஒழியச்
சமதர்ம நல்லறம் தங்கி நிலைக்க
மேதினியில் எண்ணிய பெற்று - மக்கள்
மேலோங்கி வாழ வழிவகுத்த நல்லோன்.

(வள்ளுவரின்)

# அவனி காணா அருமருந்து

ஊசியினால் மருந்தேற்றி உடல்நோய் தீர்ப்பர்
உள்ளத்து நோய்தீர்க்க ஒன்றுங் காணார்
தேசிழந்து சோர்வடைந்து தேய்ந்த உள்ளம்
திட்பமுடன் உயர்வதற்குத் திறமைமிக்க
மாசிணையாப் பெருமருந்து மனத்துக் கென்றே
மாண்புடைய வள்ளுவனார் மதித்துத் தந்த
ஆசிணையாத் தமிழ்மறையே அவனி காணா
அருமருந்தாம் இதன்திறனை அளப்போர் யாரே

இரவினிலே சூழ்ந்திட்ட இருளைப் போக்க
இலங்குகின்ற மின்விளக்கிற்கு எல்லைஉண்டோ?
கரவினுடன் பொறாஅமையுங் காழ்ப்புங் கொண்டு
கயமையினாற் பிணிப்புண்டு கலங்கும் உள்ளம்
விரவிடும்பேர் இருள்தன்னை விரட்ட வல்ல
வெளிச்சத்தைப் பரப்புமொரு விளக்கு நல்லோர்
பரவிடுஞ்செந் தமிழ்மறையே படித்துப் பார்த்தும்
பகருங்கள் இதற்குநிகர் பாரில் உண்டோ?

அறந்தழைக்க அரசிருத்தி அழகு செய்ய
அன்பென்னும் அணிபூட்டி அருளை நாடிச்
சிறந்தமணி முடியாகச் சிரத்திற் சூட்டிச்
செல்வம்நற் கல்வியுடன் செழித்துப் பொங்க
மறந்தவிர்த்து நல்வாழ்வு மக்கள் வாழ
மண்ணுலகை விண்ணுலகாய் மாற்றிக் காட்டிப்
பிறந்தபயன் இங்குபெறப் பிறர்சொல் லாத
பெருநெறியைத் தமிழ்மறைதான் பேசும் அன்றோ!

# உலகத்து மக்களே வாரீர்!

உலகத்து மக்களே வாரீர் - இந்த
உயர்வு நிறைந்த தமிழ்மறையைப் பாரீர்!
சிலசொல்லால் உங்களின் சிந்தை-நன்கு
சிறக்கப் பெரிதும் புரிந்திடும் விந்தை

அன்பின் வடிவத்தைக் காட்டும்-உள்ளம்
அலைக்கும் அறியாமைப் பேயினை ஓட்டும்
என்றுமுங்கள் சோம்பலைப் போக்கும்- இடர்
எத்தனை தோன்றினும் கைகொடுத்துக் காக்கும்

(உலகத்)

வாய்ப்புக் கிடைக்காமல் வாடி-உய்யும்
வழியினை உள்ளங் கொதித்திடத் தேடி
ஓய்வின்றி மாய்வோரைத் தேற்றும்-துயர்
ஒழித்து மனத்தில் உறுதியை ஏற்றும். (உலகத்)

எளியோர் தவிப்பினை மாற்றும்-யாரும்
எண்ணிய பெற்றிட நல்வழி சாற்றும்
ஒளிபெற நன்னெறி சொல்லும்-அறம்
உரைப்பதில் ஏனைய நூல்களை வெல்லும்.

(உலகத்)

உள்ளத் தினைக்கொள்ளை கொள்ளும்-என்றும்
ஊழினை வெல்லும் வழியினை விள்ளும்
கள்ளங் கபடங்கள் போக்கும் - உள்ளங்
கலக்கிடுந் தன்னல மாசினை நீக்கும். (உலகத்)

மக்கட் குலத்தினை ஒன்றாய்-மிக
மதித்துப் பொதுநீதி கூறிடும் நன்றாய்
திக்கற் றவர்பெருந் தேட்டம்-மனத்
திட்பம் பெறஇதிற் கொள்ளுவர் நாட்டம் (உலகத்)

செந்தமிழ் ஆர்வத்தை ஊட்டும்-பண்புச்
சிகரத்தி லேற்றி மதியினைத்தீட்டும்
சிந்தனை பொங்கிடச் செய்யும்-அன்பு
செழிக்க உளத்தில் அமுதினைப் பெய்யும். (உலகத்)

துன்பம் வரும்பொழுது நாளும்-நீங்கள்
துயரப் படாமற் சிரிப்புடன் வாழும்
இன்ப வழியினைக் காட்டும்-இது
எழுச்சியைத் தந்து புகழினை நாட்டும். (உலகத்)

---

''பிறப்பினாலே உயர்வு தாழ்வு கற்பித்த சுயநலப் புலிகளுக்கும், பெருமை பாராட்டிய பித்தர்களுக்கும் ' பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்'', என்றும் ''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்'' என்றும் அது பாடம் கற்றுக் கொடுத்தது. பணம், பட்டம், பதவி முதலியவற்றாலும், சாதி, சமயம், இனம், நிறம் முதலியவற்றாலும் நாடு, மொழி, அரசியற் கொள்கை முதலியவற்றாலும் பிளவுபட்டுக் கிடக்கும் இவ்வுலகத்தை ஒன்றாகக் கொண்டு உலக மக்கள் யாவருக்கும் பொதுநெறி வகுத்த தனிப்பெருமைக்குரியது நமது தமிழ்மறையேயாகும்''.

கா. பொ. இரத்தினம்

# வெற்றிக்கு வழி

"எப்படி நாம் வாழ்வோம்? எமக்கிங்கு வாழ்வுண்டோ
இப்படியில் ஏன்பிறந்தோம்'' என்று கலங்கிமிகச்
சோர்வடைந் துள்ளம் சுழன்றிங்கு வாழ்ந்திட
ஓர்வழியைத் தேடியே ஓயா தலைகின்ற
ஏழ்மையின் தோழர்காள்! ஏனிந்தப் பேரலைச்சல்?

தாழ்வகன்று வாழத் தரணியிலே வாய்ப்புண்டு
மந்திரத்தால் எவ்விடத்தும் மாங்காய் விழுவதில்லை
தந்திரத்தால் எங்கும் தழைக்க முடியாது
சூழ்ந்து பிறரைச் சுரண்டி வளம்பெறுவோர்
வீழ்ச்சியினை முத்தமிட்டு வேரற்றுப் போகின்றார்

காக்காய் பிடித்துமற்பர் காலைப் பிடித்துமிங்கு
ஆக்கம் பெறமுயன்றால் ஆல்போற் பழிநிலைக்கும்
எந்தச் சிறப்பினைநீர் எய்த விரும்பிடினும்
இந்த உலகில் எளிதினிலே பெற்றிடற்கு
எல்லோரும் போற்றுகின்ற ஏற்றமுடை வள்ளுவனார்
நல்லவழியை நயம்பொலியச் சொல்கின்றார்
அவ்வழியை நீங்கள் அறிய உரைக்கின்றேன்.
செவ்வழியோ அன்றோ செயற்படுத்திக் கண்டிடுவீர்

எண்ணுகின்ற போதெல்லாம் ஏற்றமுற எண்ண
வேண்டும்
எண்ணுகின்ற ஒன்றினை எய்திடவே எண்ணினால்
மீண்டுமதை எண்ணிஎண்ணி மிக்கவுளத்திண்மை
யினைப்

பூண்டுகௌல் வேண்டும்பின் போக்கரிய துன்பங்கள்
வந்தாலும் உள்ளம் வதங்கிக் கலங்காமல்
நந்தாத செல்வ நகைப்பினாற் போக்கியே
மோதுகின்ற பந்தைப்போல் முனைந்தெழுந் தூக்கத்தைப்
போதும் அளவுக்குப் பொங்கிடச் செய்தே

எடுத்த கருமம் இனிது நிறைவேற
அடுத்து முயல்வதே அந்தவழி. இன்றிதனை
எல்லோர்க்கும் வெற்றிதரும் இன்பவழியென்று
நல்லோர்கள் போற்றுகின்றார் நன்கு.

---

''பல துறைகளிலும் மனிதனை மனிதனாக வாழ-பிறர் உதவியின்றி வாழ-தனக்கும் பிறருக்கும் பயன்பட வாழ-வழிகாட்டிய தனிச் சிறப்பினாலே தமிழ் மறையை யாவரும் போற்றத் தொடங்கினர். பிறநாட்டு மக்களும் இதன் பெருமையை அறிந்தவுடன் தம்முடைய மொழிகளிலே மொழி பெயர்த்துத் தம் மக்களும் பயனடையச் செய்கின்றனர். ''மக்கள் யாவரையும் முழு மனிதராக்கும் தமிழ் மறையைப் போன்று சிறந்தோங்கும் இலக்கிய நூல் இவ்வுலகில் வேறொன்றுமில்லை.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல்'', ''பகை நட்பாக் கொண்டொழுகும் பண்புடையார் தகைமைக் கட்டங் கிற்றுலகு'' எனும் இந்த அறிவுரைகளே, அணுக்குண்டு, நீர்வளிக்குண்டு, ஏவுகணைகள் முதலியவற்றால் உலகம் அழிந்தொழியாமல் நிலைத்து நிற்க வேண்டுமெனின் மக்கள் யாவரும் இனிக் கைக்கொள்ள வேண்டியன''. —கா. பொ. இரத்தினம்

## தமிழ்மறைக்காவலர்
## கா.பொ. இரத்தினம் எழுதியபிற நூல்கள்

1. அடிமைச் சாசனம்
2. இருபத்து நான்கு மணி நேரத்தில் தமிழ் ஈழம்
3. இலக்கியங் கற்பித்தல்
4. இலங்கையில் இன்பத்தமிழ் 5. உரை வண்ணம்
6. காவிய மணம்
7. தடுப்புக் காவலில் பத்து நாள்கள்
8. தமிழ் உணர்ச்சி 9. தமிழ் ஈழப் போராட்டம்
10. தனி ஆட்சி 11. தாவாரம் இல்லை
12. நூற்றாண்டுகளில் தமிழ்
13. பச்சை மண்ணும் சுட்டமண்ணும்
14. மனப்பால் 15. யாஅம் இரப்பவை
16. நினைவுத் திரைகள்

### கவிதை நூல்கள்

அன்புச்சோலை ★ இமயத்து உச்சியில் ★ தமிழ் ஈழம் ஐம்பது

### தொகுத்தும் எழுதிச் சேர்த்தும் பதித்த நூல்கள்

1. எழுத்தாளர் கல்கி 2. தமிழ்மறைக் கட்டுரைகள்
3. திருவள்ளுவர் திருநாள் 4. நாவலர் நினைவு மலர்
5. பேரம்பலப்புலவர் நினைவு மலர் 6. முருகு

### எழுதப்படுவன

1. இலங்கையில் தமிழ்மொழிப் போராட்டம்
2. இறந்தும் இறவாதோர்
3. திருவள்ளுவர் ஒரு பல்கலை வித்தகர்